சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

# மண வாழ்வு தரும் மணக்கால்

மணக்கால் ஸ்ரீ சௌந்தர நாயகி சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வர சுவாமி ஆலய

# மஹா கும்பாபிஷேக விழா மலர்

(பெருவேளூர்,கரவீரம்,இராப்பட்டீச்வரம் ஆகிய தலங்களின் குறிப்புக்களுடன்)



**திருவாதிரையான் திருவருட் சபை, சென்னை.**

**செப்டம்பர் 15, 2013**

## பணிவுரை

தெய்வப் பொன்னி நதி வளம் கொழிக்கும் சோழ வளநாட்டில் காவிரியின் இருகரைகளிலும் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 190 ஆகும். பழமையான தலங்கள் பலவற்றின் திருப்பதிகங்கள் கிடைக்காமல் போயின. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் பாடல் பெற்ற தலப் பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய தலங்களை வைப்புத் தலங்கள் என்பர் ஆன்றோர். இவ்வரிசையில் ஒன்றாக விளங்குவது மணக்கால் என்ற பழம்பதி ஆகும். திருவாரூர்ப் பெருமான் மீது திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய திருத்தாண்டகப் பதிகம் ஒன்றில் இத்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் எண்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கும்பாபிஷேகம் காணாது இருந்தபடியால், அன்பர்கள் பலரது ஆதரவுடன் , பல்வேறு திருப்பணிகள் நிறைவேறி, இதன் குடமுழக்கு விழா, 15.9.2013 ஞாயிறன்று நடைபெறுகிறது. இத்திருப்பணியில் சிறு அங்கம் வகித்த திருவாதிரையான் திருவருட் சபை , இத்திருநாளை முன்னிட்டு, இத்தலவரலாறு, மற்றும் அருகாமையில் உள்ள தலங்களின் குறிப்புக்கள் ஆகியவை அடங்கிய சிறு நூலை அடியார்களுக்கு வழங்குவதைப் பெறும் பேறாகக் கருதுகிறது. திருப்பணிக்குத் துணை செய்த சபை அன்பர்களுக்கும் ஏனைச்சிவநேசச்செல்வர்களுக்கும் திருவருள் என்றென்றும் துணை செய்வதாக. கும்பாபிஷேகம் பற்றிய சுருக்கமான குறிப்புக்கள் நூல் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. காலம் கருதி வெளியிடப்படும் வேண்டுகோளும் நிறைவாகக் காணலாம். இப்பணியில் எம்மையும் ஓர் பொருளாக ஆட்கொண்ட ஆடல்வல்ல நாதனின் மலர்ச்சேவடிகளை வாழ்த்தி வணங்குகிறோம்.

சிவபாதசேகரன்

திருவாதிரையான் திருவருட் சபை,சென்னை .

9840744337

# மணக்கால்  தல வரலாறு

உ

திருச்சிற்றம்பலம்

நல்லூரே நன்றாக நட்டமிட்டு நரை ஏற்றைப் பழையாறே பாய ஏறிப்
பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர்மீதே பலர்காணத் தலையாலங்காட்டினூடே
இல்லார்ந்த பெருவேளூர்த்தளியேபேணி இராப்பட்டீச்சரம்கடந்துமணக்கால்புக்கு
எல்லாரும் தனிச்சாத்தங்குடியில்காண இறைபபோழுதில்திருவாரூர்புக்கார்தாமே.

திருச்சிற்றம்பலம்

--- திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**தலமும் இருப்பிடமும்:** புண்ணியத் தலங்களும் தீர்த்தங்களும் நிறைந்த சோழ வளநாட்டில் தெய்வப்பொன்னி நதியின் தென்கரையில் உள்ள தேவார வைப்புத்தலங்களுள்மணக்கால் எனும் இத்தலம்,வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்பும் மிக்க தலமாக விளங்குகிறது.

* இருப்புப் பாதை வழியில் செல்வோர் திருவாரூரில் இறங்கி, கும்பகோணம் செல்லும் பேருந்து மார்க்கத்தில் 8 கி.மீ. பயணித்தால், இதனை வந்து அடையலாம். கும்பகோணத்திலிருந்து வருவோர் திருவாரூர் செல்லும் பேருந்து மூலமாக சுமார் 30 கி.மீ.பயணிக்க வேண்டும்.பேருந்து பாதையை ஒட்டியவாறே ஆலயம் அமைந்துள்ளது.

**தலத்தின் தொன்மை:** இத்திருக்கோயில், சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டதுஎன்பதைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன..

**தலத்தின் பெருமை:** மேற்கு நோக்கிய சிவாலயம். அம்பிகை சன்னதி, சுவாமிக்கு வலது பாகத்தில் அமைந்துள்ளது..

**கோயில் அமைப்பு:** ஊரின் ஆரம்பத்தில் அமைந்துள்ள இச்சிவாலயத்தின் மேற்கில் திருக்குளம் உள்ளது. இதன் கரையில் விநாயகர் சன்னதி உள்ளது. ஆலய மதிலை ஒட்டியபடி ஆதிசைவர் மனைக்கட்டு உள்ளது. ராஜ கோபுரம் இல்லாததால் நுழைவு வாயிலில் பஞ்ச மூர்த்திகளோடு கூடிய .வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், பலிபீடம், நந்தி ஆகியவற்றை தரிசிக்கலாம். இதன் அருகில் தெற்கு நோக்கிய அம்பாள் சன்னதியைக் காணலாம்.

மூலவர் சன்னதி சற்று உயரத்தில் காணப்படுகிறது. முகப்பில் விநாயகப் பெருமான் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறார். மகாமண்டபத்தில் நிருத்த சபை அமைந்துள்ளது.

கர்பக்கிருகத்தில் ஸ்ரீ அகஸ்தீஸ்வர சுவாமி சுயம்பு மூர்த்தியாக ருத்ராக்ஷப் பந்தரின் கீழ் அற்புதக் காட்சி அளிக்கின்றார். .

வெளி மண்டபத்தில் ஸ்ரீ சௌந்தர நாயகி அழகும் கருணையும் வாய்ந்தவளாகப் பெரிய வடிவில் காட்சி அளிக்கிறாள். மண்டபத்தில் மேற்குப் பார்த்தவாறு உள்ள பைரவரின் திருவுருவம் நம்மைப் பரவசப்படுத்துவது. அருகில் சூரியன்,சனி ஆகிய மூர்த்திகளும் காணப் படுகின்றனர்.

பிராகாரத்தில் தென்மேற்கில் பெரிய வடிவில் சௌபாக்கிய கணபதியின் தனிச் சன்னதியும், வடமேற்கில் கல்யாண சுப்ரமண்யரின் சன்னதியும் அமைந்துள்ளன. ஆறுமுகப்பெருமான் இருபுறமும் தேவியர்கள் நிற்க, அழகே வடிவினனாக மயிலில் அமர்ந்து அருட்காட்சி வழங்குகின்றான்.

பிராகாரத்தில் உள்ள சண்டிகேஸ்வரர் சன்னதி, கல்வெட்டுக்களைக் கொண்ட கற்றளி. தேவ கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தி ஞானமயமாகக் காட்சி அளிக்கிறார். வடக்கு கோஷ்டத்தில் நூதன பிரதிஷ்டையாக துர்க்கா தேவியின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. கோளிலித் தலம் ஆதலால், நவக்ரகங்கள் நன்மையே தருவனவாக இறைவனது திருக்குறிப்பை நோக்கியவாறு உள்ளன. தனி சன்னதி கிடையாது.
ஸ்தல விருக்ஷமாக வில்வமரம் காணப்படுகிறது.

**புராண வரலாறு:** இறைவனது திருமணக்கோலம் காண்பதற்காக அகத்திய முனிவர் இங்குத் தவம செய்தார் என்பர். எனவே, மூலவருக்கு அகஸ்தீஸ்வரர் என்ற திருநாமம் ஏற்பட்டது.

பெருவேளூரில் அம்பிகை அபின்ன நாயகியாகத் தவக்கோலம் கொண்டு இறைவனை மணம் புரியத் தவம் செய்தபோது, திருக்கரவீரத்தில் திருமணம் நடைபெற்றது. இன்றும் அங்கு சுவாமிக்கு வலப்பாகத்தில் அம்பிகை சன்னதி உள்ளது.பின்னர் ஓர் இரவு இருவரும் இராப் பட்டீசு வரத்தில் அந்தப்புரத்தில் தங்கிவிட்டுப் பின்னர் கயிலைக்கு ஏகினர். இன்றும் அத்தலத்தில் அம்பிகைக்கு, அந்தப்புர நாயகி என்ற பெயரே வழங்கப்படுகிறது.

இத்திருமணத்திற்குப் பந்தக்கால் நிறுவிய இடம் மணக்கால் என்பதாகும்.

**வழிபட்டோர்:** அகத்திய முனிவர். திருநாவுக்கரசு நாயனார் . இத்தலத்திற்கு அருகிலுள்ள பெருவேளூரைப் பாடியிருப்பதாலும்,திருவாரூர்ப்பதிகத்தில் இத்தலத்தின் பெயரை வைத்துப் பாடியிருப்பதாலும் அப்பர் பெருமான் மணக்காலையும் தரிசித்துப் பாடியிருக்க வேண்டும்.,பெருவேளூர்,,கரவீரம் ஆகிய தலங்கள் திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்றுள்ளதால், சம்பந்தப்பெருமான் மணக்காலுக்கும் எழுந்தருளி, பதிகங்கள் பாடியிருப்பார். அதுபோலவே, அருகிலுள்ள ஊர்களான திருவாஞ்சியத்தையும், திருவாரூரையும் பாடியுள்ள சுந்தரரும் இத்தலத்து இறைவரைப் பாடியிருப்பார். நமது தவக்குறைவால், நமக்கு அப்பதிகங்கள் கிடைக்கவில்லை.

**பிற செய்திகள்: தை** மாதத்தில் மாலையில் சூரியஅஸ்தமனத்தின் போது, சூரியனின் ஒளிக்கதிர்கள் சுவாமியின் மீது விழும் நேரத்தில் சூரியபூஜை நடத்தப்படுகிறது.

திருமணம் தாமதப்பட்டால் இங்கு வந்து, கல்யாணக் கோலத்திலுள்ள சுவாமி-அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, புது வஸ்திரங்கள், மாலைகள் ஆகியன அணிவித்துப் பிரார்த்தனை செய்து கொண்டால், விரைவிலேயே திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

இங்குள்ள பைரவர் மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. தீராத பகைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பவர். எனவே, தேய்பிறை அஷ்டமியின்போது மக்கள் இவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, நலம் யாவும் பெறுகின்றனர்.

செவ்வாய்க்கிழமைகளிலும்,கார்த்திகை-சஷ்டி தினங்களிலும் முருகனை வழிபட்டு, திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் ஆகிய கோரிய வரங்களைப் பெறுகின்றனர்.

சங்கடஹர சதுர்த்தி தினங்களில் சௌபாக்ய விநாயகரை வழிபாட்டு எல்லா நலன்களையும் பெறுகிறார்கள்.

**திருப்பணிகள்:** இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடந்து சுமார் எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்று ஊர்ப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.. சில ஆண்டுகளுக்கு முன்னர் பாலாலயம் செய்து திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அன்பர்கள் ஆதரவுடனும் சிவனருளாலும் பல்வேறு திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகம் 15.9.2013 அன்று நடைபெறுகிறது..

**அருகாமையில் உள்ள சிவாலயங்கள்:**

இப்பகுதியில் புராதனக் கோயில்கள் பல உள்ளன. இங்கிருந்து சுமார் ஒரு கி. மீ. தொலைவில் பெருவேளூர் என்ற சிவஸ்தலம் உள்ளது. முருகப்பெருமான் சிவபூஜை செய்த தலங்களுள் இதுவும் ஒன்று. இது கோச்செங்கட் சோழ நாயனார் கட்டிய மாடக் கோயில்களுள் ஒன்று. மாடக் கோயிலின் மேல் தலத்தில் பெருவேளூர் பிரியாத நாதரின் சன்னதி அமைந்துள்ளது. சதுர ஆவுடையார் மீது சுவாமி அற்புத தரிசனம் தருகிறார். பிராகாரத்தில் அமர்ந்த நிலையில் அபின்ன நாயகி என்ற பெயர் தாங்கி அம்பிகை அபூர்வ தரிசனம் தருகிறாள். திருமாலின் சன்னதியும் பிராகாரத்தில் அமைந்துள்ளது. இறைவனைத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தேவாரப் பதிகங்களால் போற்றியுள்ளனர்.

அண்ணாவும் கழுக்குன்றும் ஆய மலையவை வாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்து ஏத்த அருள் செய்வார்
கண் ஆவார் உலகுக்குக் கருத்து ஆனார் புரம் எரித்த
பெண் ஆணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

--- சம்பந்தர்

மறையணி நாவினானை மறப்பிலார் மனத்து உளானைக்
கறை அணி கண்டன் தன்னைக் கனல் எரி ஆடினானைப்
பிறை அணி சடையினானைப் பெருவேளூர் பேணினானை
நரை அணி மலர்கள் தூவி நாள் தோறும் வணங்குவேனே.

--- அப்பர்

இதே ஊரின் மறுபகுதியான இராப் பட்டீஸ்வரத்தில் அமைந்துள்ள சிவாலயம் ஒரு தேவார வைப்புத் தலம். இதுவும் மேற்கு நோக்கியது சுவாமி சேஷபுரீஸ்வரர் என்றும் தேவி, அந்தப்புர நாயகி என்றும் வழங்கப்படுகிறார்கள் கோஷ்டங்களிலும்,ப்ராகாரத்திலும் காணப்படும் மூர்த்திகள் இங்கு மகா மண்டபத்தில் காணப்படுவது ஒரு சிறப்பு அம்சம். சேஷபுரீஸ்வரருக்கு எதிரில் உள்ள நந்தி, தன் தலையைத் திருப்பி தட்சிணாமூர்த்தியைப் பார்த்தவாறு அமைந்துள்ளது.இங்கு பெரிய வடிவில் பைரவர் காட்சி தருகிறார். இவருக்கு அஷ்டமி நாட்களில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.சர்ப்ப தோஷங்கள் நிவர்த்தியாகும் தலம். கணபதியும் கந்தனும் கண்ணை விட்டு அகலாத வகையில் காட்சி தருகிறார்கள். .

மணக்கால் ஐயம்பேட்டையிலிருந்து திருவாரூர் செல்லும் பாதையில் உள்ள அடுத்த ஊர் திருக்கரவீரம் என்ற தேவாரப் பாடல் பெற்ற அற்புதமான திருத்தலம்.சுவாமியும் அம்பாளும் பெரிய திரு உருவில்

தரிசனம் தருகிறார்கள். சுவாமிக்கு வலப்புறம் திருமணக் கோலமாகக் கிழக்கு நோக்கியவாறு அம்பிகை சன்னதி அமைந்துள்ளது. அரளியை ஸ்தல விருக்ஷமாகக் கொண்ட இத்தலத்தில் அமாவாசை தினங்களில் அன்பர்கள் திரளாக வந்து வழிபடுகிறார்கள்.திருமணத் தடைக்குப் பரிகாரம் தருவது இத்தலம். திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் ஒன்று இதன் மீது உள்ளது.பாவ வினைகளைத் தீர்க்கும் தலம் இது என சம்பந்தர் அருளியுள்ளார்.

தங்குமோ வினை தாழ் சடை மேலவன்
திங்களோடு உடன் சூடிய
கங்கையான் திகழும் கரவீரத்து எம்
சங்கரன் கழல் சாரவே.

- சம்பந்தர்

ப்ரத்யக்ஷ மின் அம்பிகை உடனாய கரவீர நாதர் ஆலயத்தை அன்பர்கள் அவசியம் தரிசித்து இம்மை மறுமைப் பலன்களை அடைவார்களாக.

மேற்படி சாலையில் தொடர்ந்தால் வடகண்டம் என்று தற்போது வழங்கப்படும் தனிச்சாத்தங்குடி சிவாலயத்தைத் தரிசிக்கலாம்.இதுவும் ஓர் தேவார வைப்புத் தலம்.

**சமயப்பணி:** சமயப் பணி செய்யும் ஆர்வலர்களும் தல யாத்திரை செய்யும் அன்பர்களும் மணக்கால், இராப் பட்டீஸ்வரம் கோயில்களின் வளர்ச்சியில் பங்காற்றினால் இவ்வாலயங்கள் மேலும் வளர்ச்சி அடைந்து நன்கு பராமரிக்கப்பட ஏதுவாகும்.

தல யாத்திரை செய்யும் அடியார் பெருமக்கள், தங்கள் வருகையைப் பற்றி முன்கூட்டியே தெரிவிக்க விரும்பினால்
,தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 7299555527.



# மகாகும்பாபிஷேகம்

உலக நன்மைக்காகச் செய்யப்படுவது ஆலய பூஜை. இதன் புனிதத்துவத்தைக் காக்கவும் ,மேம்படுத்தவும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்ய வேண்டியது குடமுழுக்கு ஆகும். இதன் அங்கமாகச் செய்யப்படும் கிரியைகளைப் பற்றிய சிறுகுறிப்பு இங்கு தரப்படுகிறது.

யாகசாலை, 36 தத்துவங்களைக் குறிப்பது. அதில்,அர்தச்சந்திர வடிவம், நாற்கோணம்,முக்கோணம்.,முதலிய நவ குண்டங்களை அமைத்து, ஆல் அரசு முதலிய சமித்துக்களால் அக்னிவளர்த்து,மந்திரம்,கிரியை,பாவனை ஆகியவற்றால் யாகம் செய்வர். இதனால், கும்பத்தில் ஆவாகனம் செய்யப்பெற்ற மூர்த்தியின் அருட் சக்தி மேலும் தூண்டப்பெற்று ,நிறைவாக, ஆலயத்திலுள்ள பிம்பத்தில் தருப்பைக் கயிற்றால் சேர்க்கப்பெற்று, கும்பத்துப் புனித நீரால்,விமான கலசங்களிலும், கோபுரங்களிலும் அபிஷேகம் செய்யப் படுகிறது.

பிரதிஷ்டைக்குரிய கிரியைகளுள் முதலில், தனபூஜை, அனுக்ஞை ஆகியன செய்யும்போது, சிவார்ப்பணம் செய்யப்பட பொருள்,11பாகமாகப் பிரிக்கப்பட்டு, யாகத்திற்கு 3பாகமும், ஆச்சார்ய ,ருத்விக் தக்ஷிணை, போஜனம்,வேத பாராயணம் ஆகியவற்றிற்கு தலா 2பாகமும், மகாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேகத்திற்குத் தலா ஒரு பாகமும் பிரித்துச் செலவழிக்க வேண்டும். யாகத்தை நடத்தித்தர ஸ்வாமி,அம்பாள் மற்றும் சபையோரிடம் அனுமதி பெறப்படுகிறது.பிறகு இடர்கள் வராமலிருக்க விக்னேஸ்வர பூஜையும், வாஸ்து புருஷனால் தீமை வராமலிருக்க வாஸ்து சாந்தியும், பூமியை சுத்தி படுத்த ம்ருத்சங்கிரஹணமும் கிரியைகளின் சுபாசுபங்களை அறிய அங்குரார்ப் -பணமும் ஆசார்யனைக் காக்க ரக்ஷா பந்தனமும், பஞ்ச சுத்திகளைச் செய்து, ஆசார்யன் தன்னை சிவ பூஜைக்குத் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கும்பஸ்தாபனம் செய்து,மூலஸ்தானத்திலிருந்து சுவாமியை குடத்தில் கலாகர்ஷனம் செய்து, குறிப்பிட்ட காலம் வரை இருக்கச்செய்ய வேண்டும். பீடத்தையும் பிம்பத்தையும் சேர்ப்பது அஷ்ட பந்தன மருந்து. சுக்கான், குங்கிலியம் , கொம்பரக்கு, லிங்கம், வெள்ளை மெழுகு,காவி, செம்பஞ்சு, வெண்ணை ஆகிய பொருள்களைச் சேர்த்துத் தயாரிக்கப்படுவது இது. பின்னர் ஸ்பர்சாகுதி செய்து, தர்பைக் கயிறு மூலம் சுவாமியை ஆலயத்திலுள்ள பிம்பத்தில் சேர்த்து, கடத்திலுள்ள புனித நீரால் கலசங்களுக்கும் பிம்பங்களுக்கும் அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் மகாபிஷேகம் நடை பெறுகிறது.

# முக்கிய வேண்டுகோள்

பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெறுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நித்திய பூஜைகளும் விழாக்களும் முறைப்படி செய்வதாகும்.. இதற்காக,ஒரு வைப்பு நிதி அமைக்கப் பெறுதல் அவசியம்.

ஆலய சிப்பந்திகள் கிராமக் கோயில்களில் மிகக் குறைந்த ஊதியமே பெறுகிறார்கள். ஊராரும், அரசாங்கமும் இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நில வருவாய் குறைந்துவிட்ட இக்காலத்தில், வெளி ஊரிலுள்ள அன்பர்களின் ஆதரவால் மட்டுமே திருப்பணிகளைச் செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாத வருமானத்தில் ஒரு சிறு பகுதியையாவது சிவாலயத் திருப்பணிக்கு அளிக்க முன்வர வேண்டும்.

இல்லங்களில் சுப காரியங்கள் நடைபெறும் போது அதற்காகும் செலவில் ஒரு சிறிய பகுதியை சிவாலய நித்திய பூஜைக்காக அளிக்க முன்வரவேண்டும்.

நகரங்களில் உள்ள அன்பர்கள் அருகிலுள்ள கிராமக் கோயில்களுக்குச் சென்று எண்ணெய்,புஷ்பம் போன்றவற்றை அளிப்பதோடு, அர்ச்சகருக்கு இயன்ற அளவு சம்பாவனை வழங்க வேண்டும்.

இவ்வழிபாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்தி நல்வழி காட்ட வேண்டும்.

நித்திய மற்றும் வார வழிபாட்டுக் குழுக்கள் ஊர் தோறும் அமைக்கப் படவேண்டும்.

# www.shaivam.org

***இணைய தளத்தில் பெறும் தகவல்கள் :***

- ***சிவாலயங்கள் பற்றிய ஏராளமான தகவல்கள்***
- ***பன்னிரு திருமுறைகள் : மூலம்***
- ***சைவ சித்தாந்த சாத்திரங்கள்: மூலம்***
- ***தல புராணங்கள் மற்றும் இலக்கியங்கள் : மூலம்***
- ***வட மொழியிலுள்ள சிவ ஸ்தோத்திரங்கள்***
- ***சிவ பக்தியை வளர்க்கும் 24 மணி நேர ரேடியோ***
- ***வீடியோ நாடகங்கள் , கலை நிகழ்ச்சிகள்***
- ***திருமுறை பயிற்சி வகுப்புகள் , சொற்பொழிவுகள்,இசை நிகழ்ச்சிகள்***
- ***மகான்களின் வரலாறுகள்***
- ***ஆலய விழாக்கள்,திருப்பணிகள்,குடமுழுக்கு***
- வீர சைவம்,காஷ்மீர சைவம் பற்றிய குறிப்புகள்
- இந்து சமய அறிமுகக் கட்டுரைகள்
- 5000-க்கு மேற்பட்ட பக்கங்கள் /படங்கள்
- 5000-க்கு மேற்பட்ட தினசரி (இணைய தள)ப் பயனாளிகள்
- இணைய தள இலவசப் பதிவிறக்கம்
- 1996 முதல் இயங்கிவரும் இணைய தளம்